<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 10.02.2026

அசல் வழக்கு எண். 188/2016

வா.சா. 1 – ஜான் பாண்டியன், த/பெ. பெஞ்சமின் (எ) சிவ ராஜேந்திரன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>9 மற்றும் 10 பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கில் உள்ள ஏ மற்றும் பி பட்டியல் சொத்து நீங்கள் ஜெயராம ரெட்டியார் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினீர்கள் என்றால் சரிதான். வாசா.ஆ5ல் நீங்கள் வாங்கிய கிரைய பத்திரத்தில் சர்வே எண் 429/2 மற்றும் 429/3 ஆகிய சொத்துக்கள் இருக்கிறதா என்றால் ஆவணத்தில் இல்லை. எழுத்து மூலமாக 5 ஏக்கர் 53 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரைய பத்திரம் எழுதியவுடன் அந்த பத்திரம் உங்கள் கைக்கு வந்துவிட்டது என்றால் சரிதான். உங்களுடைய ஆவணத்தில் சர்வே எண் மற்றும் பரப்பளவு குறிப்பிடப்பட்டுள்ளது அது இரண்டும் வெவ்வேறு விதமாக அளவுகளில் இருப்பது உங்களுக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் கடந்த 2014 ஆம் ஆண்டு எனக்கு தெரிய வந்தது. நீங்கள் கிரய பத்திரம் எழுதி வாங்கிய பிறகு 19 ஆண்டுகளாக கிரைய பத்திரம் உங்கள் வசம் இருந்தது அப்படி இருக்கும் பட்சத்தில் கடந்த 19 ஆண்டுகளாக நீங்கள் பரப்பளவு வேறுபாடு உள்ளது என்பதை தெரிந்து கொள்ளவில்லையா என்றால் இது நாள் வரை என்னுடைய பராமரிப்பில் அந்த இடம் இருந்ததால் அதனை நான் கவனிக்கவில்லை. மேற்படி பத்திரத்தின் தாய் பத்திரம் உங்களிடம் இருக்கிறதா என்றால் என்னிடம் உள்ளது சான்றிட்ட நகல் என்னிடம் உள்ளது. உங்களுடைய வழக்கில் நீங்கள் கடந்த 02.11.1938 தேதியிட்ட ஒரு தாய் பத்திரம் குறித்து குறிப்பிட்டுள்ளீர்கள் அந்த பத்திரத்தின் அசல்

உங்களிடம் உள்ளதா என்றால் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன் ஜெயராம் ரெட்டியார் கொடுத்த பத்திரங்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் உள்ள முதல் ஐட்டத்தில் சொல்லப்பட்டுள்ள இரண்டு சர்வே எண்கள் அதாவது 429/2 மற்றும் சர்வே நம்பர் 429/3 ஆகிய இரண்டு சர்வே எண்களில் உள்ள சொத்துக்களை இந்த வழக்கின் ஒன்பதாவது பிரதிவாதி மார்சர்ல கிரண் என்பவர் கிரையம் வாங்கி விட்டார் என்றால் சரியல்ல. நான் கிரயம் வாங்கிய பிறகு கடந்த 2014 ஆம் ஆண்டு நான் இடத்திற்கு சென்று பார்வையிட்ட பொழுது தெரிந்து கொண்டேன். பட்டியல் சொத்து 1ல் அடங்கிய இரண்டு ஐட்ட சொத்துக்களை நீங்கள் கிரயம் வாங்காததால் உங்களுக்கு அந்த சொத்தில் உரிமை இல்லை ஒன்பதாவது பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ளார் ஆகவே அவருக்கு தான் சொத்தில் உரிமை உண்டு உங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியில்லை. இந்த வழக்கில் மேற்படி இரண்டு ஐட்ட சொத்துக்களுக்கு ஒன்பதாவது பிரதிவாதி பத்தாம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு பொது அதிகார பத்திரம் வழங்கி உள்ளார் என்றால் கேள்விப்பட்டேன். இந்த வழக்கில் நீங்கள் தோன்றாத தரப்பினராக இருந்ததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது இதற்கு முன்பாக என்றால் தெரியாது. மீண்டும் விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்று நீங்கள் ஒரு மனு தாக்கல் செய்தீர்கள் என்றால் தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கு சதள்ளுபடி செய்யப்பட்ட காலகட்டத்தில் பத்தாவது பிரதிவாதி பொது அதிகாரம் முகவர் என்கிற அடிப்படையில் வழக்கு சொத்தினை மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வா.சா.ஆ7 ஆவணம் உங்கள்

பெயரில் வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். எந்த வருடம் அது வழங்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி பட்டாவில் முதல் பட்டியல் சொத்து ஐட்டம் ஒன்று மட்டும் இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்கள் 429/2 மற்றும் 429/3 ஆகிய சர்வே எண்கள் இல்லை என்றால் சரிதான். ஒன்பதாவது பிரதிவாதி மேற்படி இரண்டு சொத்து ஐட்டங்களை உங்களுக்கு விற்பனை செய்யவில்லை என்பதே அறிந்து தான் முதல் செட்யூல் சொத்தை வாங்கினார் என்றால் சரியில்லை. ஆகவே நீங்கள் கோரிய பரிகாரம் முதல் ஷெடியூல் பொறுத்தளவில் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை. வழக்கு சொத்து காலியாக இருக்கிறது என்றால் என்னுடைய பராமரிப்பில் இருந்து வருகிறது. காலி மனையாக இருக்கிறதா என்றால் காலி மனையாக இருக்கிறது கல்லு போட்டு வேலி போட்டு பாதுகாத்து வருகிறோம். உங்களிடம் சுவாதீனமும் இல்லை என்று சொன்னால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.